

ஆசிரியர் மடல்

# இயேசுவே மெய்யான ஒளி

**அன்பான வாசகர்களுக்கு , இறை மக்களுக்கு ,**

**இரட்சகரும் மீட்பரும் வரப்போகிற இராஜாதி இராஜாவுமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.**

ஊரில் ஆடி முடிந்துவிட்டது.அநேகரின் ஆட்டமும்,பாட்டமும், கூச்சலும், கூப்பாடும் அடங்கியிருக்கிறது.ஆடியின் மனித சடங்குகளும், விதிகளும் விதிமீறாமல் கடைபிடிக்கப்பட்டது . அப்பா... சாதித்துவிட்டோம்,சரியாக எல்லாவற்றையும் நிறைவேற்றிவிட்டோம் என்ற கானல் சிந்தையிலும், கானல் வெளிச்சத்திலும் அநேகர் அமர்ந்திருக்கிறார்கள்.ஜனங்களுக்காக இறைவன் பரிதபிக்கிறார்.ஒருபக்கம் இப்படியென்றால்,இன்னொரு பக்கம் காவடிக்கு பதிலாக காலடி (பாதயாத்திரை) தங்கள் பெயர் விளங்க தேர். ( வேதபுத்தகத்தில் தேரை பற்றி இயேசுவின் நாட்களில் எங்கேயாவது சொல்லியிருக்கிறதா என்று நானும் தேடி தேடி மேய்ந்து பார்த்து தேய்ந்து போனேன் ) எங்கேயும் காணோம்.சாய்ந்து போன நிழலுக்கு ஒப்பான மனுஷனுடைய நாட்களின் விலை தெரியாமல்,இறைவனை கூட்டம் கூட்டமாக ஜனங்கள் விலை பேசிக் கொண்டிருப்பதைக் கண்டு இறைவன் பரிதபிக்கிறார்.

வார்த்தையான இறைவன் மனிதனாக அவதாரம் எடுத்து,அவதரித்தபோது நம்மை போல் தாகமாயிருந்தார்,பெலவீனமாயிருந்தார்,தாகத்தோடு, பசியோடு , பெலவீனத்தோடு சத்திய தேவன் சத்தியத்தை சொல்லி கொண்டு வந்தார்.ஆதியிலே வார்த்தை இருந்தது அந்த வார்த்தை தேவனாயிருந்தது.அந்த வார்த்தை கிருபையும் சத்தியமும் நிறைந்தவராய், நம் மத்தியிலே வாசம் பண்ணினது (யோவான் சுவிசேஷம்) இயேசுவின் வார்த்தையினால் நாமெல்லாரும் நிருபங்களாய் மாற வேண்டும். அதை விட்டுவிட்டு சுரூபங்களாய் மாறுவதும்,சுரூபங்களை தூக்கி சுமப்பதும் , கல்வாரியில் தொங்கின சத்தியமாக அந்த இறைவனுக்கு எத்தனை வேதனை... ஒருநிமிடம் சிந்தித்துப் பார்ப்போம்.எல்லா மனுஷராலும் அறிந்து வாசிக்கப்படுகிற நிருபங்களாய் நீங்கள் இருக்கிறீர்களே என்று அப்போஸ்தலர் பவுல், கொரிந்தியரிடம் கூறுகிறார்.அநேகர் அவரை கூறு போட்டு அவருக்கே உரிய மகிமையை புனிதர்கள் என்று மனிதர்களுக்கு கொடுப்பது அவரை நாமே மறுபடியும் சிலுவையில் அறைவதற்கு சமமல்லவா!

என் ஜனங்கள் அறிவில்லாமையால் சங்காரமாகிறார்கள் (ஓசியா4 : 6) **ஆத்துமா அறிவில்லாமல் இருப்பது நல்லதல்ல** (நீதி 19 : 2).எந்தக் கூட்டமானாலும் சரி,மேற்சொன்ன சத்திய அறிவு இல்லாவிட்டால் நம்முடைய பக்தியெல்லாம் வீண். நம் தேவனிடத்தில் பட்சபாதமில்லை. நினைவு கொள்வோம் .

மாதங்கள் மாறும், மதங்களும் மாறும் வேதம் மாறாது.வேதமாகிய இறைவன் இயேசு மாறாதவர்.நாம் அனைவரும் தேறும்படி நல்ல தீர்மானங்களோடு அவருடைய அடிச்சுவடுகளையே பின்பற்றி நடப்போம்.**ஆடிச்சுவடுகள் மாறட்டும் . அடிச்சுவடுகள் மலரட்டும்.**

**நெகேமியா**(ஆலயப் பணி) இரண்டாம் கட்ட *(Second Stage)* பணிகள் ஆரம்பித்து விட்டோம்.

*Building Structural Drawings* எல்லாம் நிறைவுற்றது.நின்று யோசித்தால் முற்றிலும் இயலாத காரியம்தான்.ஆரம்பித்துவிட்டால் தேவன் யோசிக்க ஆரம்பிப்பார்.யோர்தான் புரண்டு வருவதை என் நினைவுக்குள் கொண்டு வந்தார். அருகில்கூட போக முடியாத ஒரு பெருவெள்ளம்.ஆனால் ஆசாரியர் களை அதில் நிற்கச்சொல் என்று தலைவன் யோசுவாவிடம் கர்த்தர் பேசுகிறார்.வெறுமையாக இல்லை. உடன்படிக்கை பெட்டியை சுமந்துகொண்டு நிற்கச் சொல்லுகிறார்.ஆசாரியர்கள் சொன்னதை நிறைவேற்ற துணிந்தார்கள்.சுமந்தார்கள்.யோர்தானிலே கால்கள் பட்டவுடன் பெருவெள்ளம் குவியலாக நின்றது. ஆம்,**நீங்கள் விசுவாசித்தால் தேவனுடைய மகிமையை காண்பீர்கள்** (யோ 11 : 40).உடன்படிக்கை பெட்டிதான் ஆசாரியர்களாகிய ஊழியர், ஸ்தாபனத் தலைவர், விசுவாசிகளின் **விசுவாசம்** . இதை எடுத்துக் கொண்டு எங்கே வேண்டுமென்றாலும் நிற்கலாம்.லட்சோப லட்சம் ஜனங்கள் கடந்து போகுமட்டும் பெட்டியைச் சுமக்கிற ஆசாரியர்கள் யோர்தானின் நடுவிலே சுமந்து கொண்டு நின்றார்கள்(யோசுவா 3 : 17)எத்தனை மணிநேரம் எத்தனை நாட்கள் தெரியாது .**காலமும் நியாமும் கர்த்தரின் கரத்தில் உண்டு** (பிர 8: 6) .

இது பாரத்தை சுமக்கும் காலம் .அழிந்துபோகும் ஆத்துமாக்களை சுமக்கும் காலம்.இரக்கத்தை சுமக்கும் காலம் . நீதியை சுமக்கும் காலம் . கர்த்தருக்காக இழப்பை சுமக்கும் காலம். சுமப்போமா ? ஆலயத்தின் பாரத்தை சுமக்க முன் வாருங்கள்.அது நம்மை பரத்திற்கு சுமந்து செல்லும்.நீதியின் பாதையை செவ்வையாக்கும் . நம் சந்ததிகள் வாழும் . *It is not an Emotion -ல் writing. It is a motional writing* . நம் கண்கள் நிச்சயமாய் காணும்.

**"உங்கள் தேவனாகிய கர்த்தர், சிவந்த சமுத்திரத்தின் தண்ணீரை நாங்கள் கடந்து தீருமட்டும் எங்களுக்கு முன்பாக வற்றிப் போகப் பண்ணினது போல, உங்கள் தேவனாகிய கர்த்தர் யோர்தானின் தண்ணீருக்கும் செய்து, அதை உங்களுக்கு முன்பாக நீங்கள் கடந்து தீருமளவும் வற்றிப் போகப் பண்ணினார் என்று அறிவிக்கக் கடவீர்கள்"**( யோசுவா 4 : 24). சிவந்த சமுத்திரத்தின் தேவன்தான் யோர்தானுக்கும் தேவனாயிருந்தார்.அதுபோல நெகேமியாவின் முதல் கட்டத்திற்கு *(First Stage)* தேவன்தான் எங்களுடைய இரண்டாம் கட்டத்திற்கும் *(Second Stage)* தேவனாயிருப்பார் என்ற விசுவாசத்தோடு ஆரம்பிக்கிறோம்.

எங்கள் மெய்யான ஒளி குடும்பத்திலே ஒரு குடும்பத்திற்கு ரூ . 10,000 /= என்று நியத்திருக்கிறோம் . கொடுத்து வருகிறார்கள்.தங்கள் திராணிக்கு மேலேயும் சிலர் கொடுக்கிறார்கள். இந்த குடும்பத்திலே இணைந்து கொள்ள இருகரம் நீட்டி உங்களையும் அழைக்கிறோம்.அநேகர் ஒன்று சேர்ந்தால் இந்த ஆண்டிலேயே பணிகளை முடித்துவிடலாம் .இந்த பூமியிலே நம்முடைய பயணம் முடியும் முன்பாக அநீதியான உலகப்பொருளால் நமக்கு சிநேகிதரை சம்பாதித்துக் கொள்ளுவோம்,**நாம் மாளும்போது நம்மை நித்தியமான வீடுகளிலே அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள்** (லூக்கா 16 : 9) ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து ஊக்கமாய் ஜெபிப்போம் .

**கிறிஸ்துவின் மகிமையான இறைப் பணியில்**
**பாஸ்டர் S. போஸ்கோ .**

**நீங்கள் அனுப்பும் கட்டிடப் பணி காணிக்கைகளுக்கு 80 G வரி விலக்கு உண்டு.**

**& 9283443230 (True Light Ministries)**
**Bank Transfer :**
**S.Bosco, State Bank Of India (SBI) A / C. No : 20003657678. Avadi .**
**Our Website : www.truelightministry.org**

*17, O.P. Raman Street, Gandhi Nagar, Avadi, Chennai - 600 054 .*

செய்தி



# மன மகிழ்ச்சி

“**மனமகிழ்ச்சி முகமலர்ச்சியைத் தரும் மனோ துக்கத்தினாலே ஆவி முறிந்து போம்**” *(நீதி 15 :13).*

அருமையானவர்களே,இந்த மாதத்தில் ஒரு சிறிய செய்தியைத்தான் நாம் தியானிக்கப் போகிறோம். இந்நாட்களில் அநேக தேவ பிள்ளைகள்,தேவஊழியர்களின் முகம் மிகவும் வாட்டமாக,மன உளைச்சலோடு காணப்படு வதை காணும்போது இந்த செய்தி என் மனதில் உருவானது.இது நமக்கு பிரயோஜனமாக இருக்கும். சேர்ந்து தியானிப்போம். மனமகிழ்ச்சி என்பது அநேக வியாதிகளை விரட்டி ஓட்டுகிற நல்ல ஒரு மருத்துவர் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.கர்ப்பத்திலிருக்கும் குழந்தைக்கும் குழந்தையை சுமக்கிற தாய்க்கும் பாடல்களாலும், இசையாலும் அவர்களை மகிழ்விப்பது அது சுகப்பிரசவத் திற்கேதுவான ஒரு படி என்று விஞ்ஞானம் சொல்லுகிறது.மாடு சாதாரணமாக பால் கறப்பதற்கும், பாடலைக் கேட்டுக்கொண்டே பால் கறப்பதற்கும் அளவிலே வித்தியாசம் இருக்கிறது என்று அதே விஞ்ஞானம் சொல்லிக் கொள்கிறது. அவர்கள் அதற்கு சொல்லுகிற ஒரே காரணம் மனமகிழ்ச்சிதான். நாம் மனமகிழ்ச்சியாய் இருக்கும்போது செய்து முடிக்கும் காரியங்கள் மற்ற வேளை களைக் காட்டிலும்,ஒரு மடங்கு அதிக மாகவே இருக்குமாம்.நம்முடைய வேதப் புத்தகம் இந்த மனமகிழ்ச்சியை அதிகமாக வலியுறுத்துகிறது. வழிகளை யும் காண்பித்துக் கொடுக்கிறது. ஆதியாகமம் 1-ம் அதிகாரத்தில் தேவன் மனிதனை உண்டாக்கி அவனை ஒரு கூடாரத்தில் வைக்கவில்லை. மாறாக அவனுக்காகவே ஒரு ஏதேன் தோட்டத் தையே உருவாக்கினார். அந்த ஏதேனில் ஒரு பெரிய நதி பாய்ந்து நான்கு ஆறுகள் ஓடுமளவுக்கு அது பெரியதாயிருந்தது. பார்வைக்கு அழகும், புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சங்களையும் அங்கே வைத்தார்.ஏற்ற துணையையும் கொடுத்தார். காரணம் என்ன? அவன் மனமகிழ்ச்சியாய் இருக்க வேண்டும் என்பதற் காக. சரி, ஆரம்பம் அப்படியென்றால் முடிவைப் பாருங்கள். வெளிப்படுத்தின விசேஷம் 22-ம் அதிகாரத்தில்,அழிந்து போகிற ஏதேனையோ,மறைந்துபோகிற நதியையோ அல்ல, மாறாக அழியாத, மறையாத ஜீவதண்ணீருள்ள சுத்தமான நதி பாய்கிற இராக்காலமில்லாமல் தொடர்ந்து கனி கொடுக்கிற ஒரு நிலையான ஏதேனை வைத்து அதிலே அதே மனிதனை சதா காலங்களிலும் (ஒருபோதும் முடிவடையாத) அரசாளும்படியாக ஏற்படுத்தி வருகிறார். காரணம் என்ன? மனிதனுடைய மன மகிழ்ச்சிதான், வேதபுத்தகத்தின் ஆரம்பமும் முடிவும். இது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. மனிதன் சந்தோஷமாக வாழ வேண்டும். சம்பூரணமாக வாழவேண்டும். மனநிறை வோடு காணப்படவேண்டும் என்பதுதான் தேவனுடைய விருப்பம். அதற்காகத்தான் தேவன் மனிதனுக்கு இன்னொரு சாயலைத் தெரிந்து கொள்ளாமல் தன் சாயலையே கொடுத்தார். ஆனால் மனிதனோ தன் சாயலை, தானே கெடுத்துக்கொண்டு மனமகிழ்ச்சியை தொலைத்துப் போட்டான்.

இன்றைய நாட்களிலே பொதுவாக மனிதர்களுடைய முகங்கள் தொங்கு முகங்களாகவே காணப்படுகிறது. மலர்ந்த முகங்களை காண்பது மிக அரிதாகிவிடுகிறது.எங்கு திரும்பினாலும் வாட்டம், தேட்டம், சோர்வு, பயம், திகில், இத்யாதி... இத்யாதி.. காரணம் என்ன? மனமகிழ்ச்சியற்ற நிலை. அப்படியே சில முகங்கள் மகிழ்ச்சிகரமாய் இருப்பதுபோல் தெரிந்தாலும், அவைகளில் பெரும்பாலானவைகள் செயற்கை சிரிப்புகளும், செயற்கை முகங்களும், செயற்கை நடைகளுமாகத்தான் இருக்கிறது.இதைத்தான் தாவீது **“வேஷமாகவே மனுஷன் திரிகிறான். விருதாவாகவே சஞ்சலப்படுகிறான்”** (சங் 39 : 6). என்று அங்கலாய்க்கிறான். இயற்கை மனிதன் செயற்கை மனிதனாக மாறி வருவதை பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் இயற்கை கிறிஸ்தவர்கள் செயற்கை கிறிஸ்தவர்களாக மாறி வருவதுதான் கொஞ்சம் கஷ்டமாயிருக்கிறது. காரணம் என்ன? மனமகிழ்ச்சியை அவர்கள் எங்கே தொலைத்துப் போட்டார்கள்? அதைத்தான் இந்த செய்தியில் சுருக்கமாக பார்க்கப் போகிறோம்.

**மனிதன் சந்தோஷமாக வாழ வேண்டும். சம்பூரணமாக வாழவேண்டும். மனநிறைவோடு காணப்படவேண்டும் என்பதுதான் தேவனுடைய விருப்பம்.அதற்காகத்தான் தேவன் மனிதனுக்கு இன்னொரு சாயலைத் தெரிந்து கொள்ளாமல் தன் சாயலையே கொடுத்தார்.**

கீழ்வரும் காரியங்களை நாம் அறிந்து கொண்டு நடக்கும்போது மனமகிழ்ச்சியே நமது வாழ்க்கையாயிருக்கும். **“மனமகிழ்ச்சி நல்ல ஔஷதம்.முறிந்த ஆவியோ எலும்புகளை உலரப்பண்ணும்”** (நீதி 17 :22).ஆம்,அதுவே எலும்புகளுக்கு புஷ்டியைத் தருகிறது. ஆயுசு நாட்களை பெருகப்பண்ணுகிறது.

## 1.ஒரு போதும் தவறு செய்யாத தேவன்



**“அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூருகின்றவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்”** (ரோமர் 8 :28).

தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு அனுமதிக்கிற யாவுமே நிச்சயமாக நன்மையாகத்தான் இருக்கும். அவர் ஒருபோதும் தவறு செய்யமாட்டார் என்ற ஒரு சரியான அறிவை நாம் பெற்றுக்கொண்டவர்களாக இருப்போமென்றால் எந்த பிசாசும் நம் மனமகிழ்ச்சியை களவாட முடியாது.

பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் **பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்கிறவர்களுக்கு, நன்மை யானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா!** (மத் 7 : 11).

ஒருவேளை நம் வாழ்விலே ஒரு தீமையான காரியம் அல்லது ஒரு கஷ்டம் ஏற்பட்டுவிட்டது என்று வைத்துக்கொள்வோம். ஏன் என்று நம் மனம் அங்கலாய்க்கலாம் குழப்பம் அதிகரிக்கலாம். ஆனால், அந்த நிலையிலும் என் தேவன் ஒருபோதும்

தவறு செய்யமாட்டார் என்ற ஒரு அனுபவத்திற்குள் தேவபிள்ளைகள் கடந்து வர வேண்டும். அது மிகவும் கடின மான காரியம் என்று சொல்ல முடியாது. அது இலகுவான காரியம்தான். எப்போது தெரியுமா? ரோமர் 8 :28 யை மறுபடியும் வாசித்துப் பாருங் கள் **தம்மிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு** ஆம், தேவனிடத்தில் உண்மையான அன்புள்ளவர்களுக்கு. தேவனை உண்மையாய் அன்பு செய்பவர் களுக்கு இது இலகுவானதுதான். யார் உண்மையான அன்பை செலுத்த முடியும்? அவருடைய வசனத்தைக் குறித்து தெளிவு உள்ளவர்கள் அவரைமுழு இருதயத்தோடு அன்புகூர முடியும். இந்நாட்களில் வசனம் எங்கே போதிக்கப்படுகிறது! எல்லாம் கட்டுக் கதைகளுக்கு செவிசாய்க்கும் காலமாய் அல்லவா இருக்கிறது பவுல் திமோத்தே யுவுக்கு அன்றே எச்சரிப்பு கொடுத்துவிட் டார்."**சீர்கேடும் கிழவிகள் பேச்சுமாயிருக் கிற கட்டுகதைகளுக்கு விலகி தேவபக்திக் கேதுவாக முயற்சி பண்ணு**"(1திமோ 4 :7). இதே அதிகாரத்தில் கடைசியில் உபதேசத் தைக் குறித்து எச்சரிக்கையாயிரு என்று அந்த அதிகாரத்தை முடிக்கிறார். பாட்டி சொன்ன கதைக்கும், அலாவுதீனும் அற்புத விளக்கு களுக்கும்தான் கிறிஸ்தவ வட்டாரத்தில் மௌசு அதிகம்.அந்த நேரத்தில் ஒரு மகிழ்ச்சி, ஒரு கை தட்டல், ஆர்ப்பரிப்பு, சந்தோஷம், கூட்டம் முடிந்து வீட்டுக்கு போனால் தொங்கு முகம். ஏன்?கதை கொஞ்ச நேரத்திற்குத் தான் வேலை செய்யும்.வசனம் வாழ்நாள் முழுவதும் வேலை செய்யும். உபதேசம் உயிருள்ள வரை வேலையை நடத்தும். ஆம், அருமையானவர்களே, தேவனை



முழுஇருதயத்தோடு அன்பு செய்ய தேவை வசன அஸ்தி பாரம். அப்படி முழு இருதயத் தோடு அன்பு செய்யும்போது தான் தேவன் ஒருபோதும் தவறு செய்கிறவர் அல்ல, எல்லாம் நன்மைக்கேதுவான வைகள்தான் என்ற அனுபவத் திலே மனமகிழ்ச்சி என்ற பாதையிலே நடந்து செல்ல முடியும்.

ஒரு பக்தனுடைய வாழ்க்கையில் புயல் வீசினது.துக்கத்தோடே கூட மரங்கள் அடர்ந்த காட்டின் வழியாக நடந்தார். திடீரென்று பெருங்காற்று வீச ஆரம்பித்தது. மரங்களில் சில கிளைகள் முறிந்து விழுந்தன. காய்ந்த இலைகள் எல்லாம் பறக்க ஆரம்பித் தன. புழுதி மண்டலம் ஆகாயத்திலே எழும்பி னது.பக்தன் அதைப் பார்த்தவுடனே, என் வாழ்க்கையிலும் புயல்.. இந்த மரங்களின் மத்தியிலும் புயல்தானா? என்று நொந்து கொண்டார்.கர்த்தர் அமைதியாகச் சொன்னார். மகனே! இந்த பெருங்காற்றினால் இந்த மரத்திற்கு எவ்வளவு நன்மை தெரியுமா? இந்த காற்றினால் மரம் அதிகமாக அசைக்கப்படு கிறது உண்மைதான். அது எவ்வளவுக்கெவ் வளவு அசைகிறதோ அவ்வளவுகவ்வளவு அதனுடைய வேர்கள் ஆழமாக பூமியில் இறங்குகிறது.அடிமரம் உறுதியுள்ளதாக விளங்குகிறது. காற்றினால் பலவீனமான கிளைகள் முறிந்துபோகிறது.காய்ந்துபோன இலைகள் உதிர்ந்து போகிறது. ஆகவே மரம் புது உற்சாகத்தோடு, இனிமை யான புது கிளைகளை உண்டு பண்ண தகுதியுள்ளதாய் இருக் கிறது. மாத்திரமல்ல, இந்த காற்று வீசுவதால் மரத்திலுள்ள விதைகள் பல இடத்திற்கு பரவு கிறது. ஆங்காங்கே புதிய மரங்கள் தோன்றுகின்றன. அதுபோலவே உன்னுடைய

**கதை கொஞ்ச நேரத்திற்குத்தான் வேலை செய்யும்.வசனம் வாழ்நாள் முழுவதும் வேலை செய்யும். உபதேசம் உயிருள்ளவரை வேலையை நடத்தும்.**


வாழ்க்கையில் புயல்வீசும்போது அது உன்னை ஆவிக்குரிய ஆழமான அனுபவத்திற்குள் கொண்டு வருகிறது. கர்த்தரை நெருங்கி பற்றிக் கொள்ள கிருபை அளிக்கிறது என்று பேசினார். அன்று அந்த பக்தன் தன் நிலையை உணர்ந்து எந்த நிலைமையிலும் மனரம்மியமாக இருக்க கற்றுக் கொண்டார்.

**உன்னுடைய வாழ்க்கையில் புயல்வீசும்போது அது உன்னை ஆவிக்குரிய ஆழமான அனுபவத்திற்குள் கொண்டு வருகிறது.கர்த்தரை நெருங்கி பற்றிக்கொள்ள கிருபை அளிக்கிறது**

அப்போஸ்தலனாகிய பவுலைப் பாருங்கள். பெரிய அப்போஸ்தலர்தான். அநேகம்பேரை இரட்சிப்புக்குள் நடத்தியவர்தான். அநேக சுவிசேஷ சுகமளிக்கிற கூட்டங்களை நடத்தியிருக்கக்கூடும். ஆனாலும் அவருடைய சரீரத்தில் அவரைக் குத்தி வேதனைப்படுத்துகிற ஒரு முள் சாத்தானின் தூதனாய் இருந்தது.அந்த சூழ்நிலையிலும் அவர் மனரம்மியமாய் இருக்கக் கற்றுக் கொண்டார். அவருடைய குறைகளைக் குறித்தும், பலவீனங்களைக் குறித்தும் மகிழ்ச்சியாய் மேன்மை பாராட்டினார்.

குறைவு இல்லாத மனுஷன் இல்லை. போராட்டம் இல்லாத வாழ்க்கையும் இல்லை. நாகமான் ஒரு பெரிய படைத்தளபதிதான். தளபதி உடையிலே நின்றால் ஜெனரல் கமாண்டரையெல்லாம் தோற்கடிக்கக்கூடிய தோற்றம்தான்.ஆனால் ஆடையை அவிழ்த்தாலோ குஷ்டம். தாவீது பெரிய ராஜாதான். ஆனால் அவனுடைய பிள்ளைகளோ ஒன்றுக்கொன்று சண்டையிடுகிறவர்களாகவும், அவனையே துரத்துகிறவர்களாயும் இருந்தனர். ஆபிரகாம் விசுவாசிகளின் தகப்பன்தான் என்றாலும் அவனுடைய மனைவியின் அழகினிமித்தம் போராட்டத்தின் பாதையில் அவன் செல்ல வேண்டியிருந்தது.கிறிஸ்து பன்னிரெண்டு சீஷர்களை தெரிந்தெடுத்தார். உண்மைதான். ஆனால் அவர்களுக்குள்ளும் ஒருவன் கள்ளனாய் இருந்தான்.முத்தத்தினால் அவரைக் காட்டிக்கொடுத்தான். தேவப் பிள்ளையே, குறைவோ நிறைவோ போராட்டமோ சமாதானமோ கர்த்தருக்குள் எப்பொழுதும் மனமகிழ்ச்சியாய் இருக்கக் கற்றுக்கொள். அது உனக்கு மிகுந்த ஆசீர்வாதமாய் இருக்கும். பவுலோடு சேர்ந்து நாமும் சொல்லலாமா!

**நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாக இருக்கக் கற்றுக் கொண்டேன். தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் தெரியும், எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும், பட்டினியாயிருக்கவும் பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன்** (பிலி 4:11-12). கிறிஸ்துவை அறிகிற அறிவு, நமக்கு இந்த போதனையை தரும். பலத்தினால் இந்த போதனையை பெற்றுக் கொள்ள முடியாது. சுய ஞானத்தினால் இந்த ஆலோசனையை பெற்றுக்கொள்ள முடியாது. நம்முடைய யுக்தியினால் இப்படிப்பட்ட அனுபவங்களை பெற்றுக் கொள்ளவே முடியாது. **இதற்கு தேவை கிறிஸ்துவை அறிகிற அறிவு மட்டும் தான்.** நம் தேவன் ஒருபோதும் தவறு செய்கிற தேவன் அல்ல என்ற நிச்சயத்தோடும் மனரம்மியமாய் நம் ஓட்டத்தை தொடர்வோம்.




www.shutterstock.com · 2144113785

## 2 . கர்த்தர் மேல் பாரத்தை வைத்து விடு



"**கர்த்தர் மேல் பாரத்தை வைத்துவிடு. அவர் உன்னை ஆதரிப்பார்; நீதிமானை ஒரு போதும் தள்ளாடவொட்டார்** "(சங் 55 : 22).

இரண்டாவதாக,மனமகிழ்ச்சிக்கு தேவையான காரியம் இதுவே.ஒரு தேவ பிள்ளை, ஒரு தேவ ஊழியர் கர்த்தர் மேல் தன் முழு பாரத்தையும் வைக்கப் பழகிக்கொள்ள வேண்டும். வாகனங்களை நாம் ஓட்டிச் செல்லும்போது வேகமாக, சிலநேரங்களில் அதிவேகமாக ஓட்டுவோம். நமக்கு பயம் இருக்காது.பக்கத்திலோ அல்லது பின்னால் இருப்பவர்களைக் குறித்து நமக்கு பயம் இருக்காது.அதே நேரம் பக்கத்திலிருப்பவர் அந்த வாகனத்தை ஓட்டும்போது நமக்கு பற்றிக்கொண்டு வரும் பயம்.அவர் மெல்ல ஒழுங்காகத்தான் ஓட்டுவார். ஆனாலும் நமக்குள் ஒரு பயம் இருக்கத்தான் செய்யும். காரணம் என்ன? Self Confidence. நம்மைக் குறித்து நமக்கு இருக்கும் ஒரு நிச்சயம். ஆனால் இந்த நிச்சயம் கிறிஸ்தவ வாழ்க் கைக்கு ஒத்து வராது. அது மனமகிழ்ச்சியை தொலைத்து விடும்.நம்முடைய நிச்சயத்தை கர்த்தர் மேல் முழுவதும் வைத்து விட்டால் நிச்சயம் மனமகிழ்ச்சி தான்.ஆனால் நடப்பது என்ன? அவர் மேல் வைப்பதற்கு நாம் தயங்குகிறோம். பொண்ணுக்கு கல்யாணம் தள்ளிப் போய்க் கொண்டேயிருக்கிறது. பொறுத்துப்பார்க்கிறோம். ஒண்ணும் வேலைக்காகல்ல. என்ன செய்கிறோம்? ஒன்று தீர்க்கதரிசியை நோக்கி ஓடுகிறோம். இல்லாவிட்டால் ஜோஸ்யரை நோக்கி நடைபோடுகிறோம் ஏதாவது பதில் கிடைக்காதா என்று! மனமகிழ்ச்சியே புதைந்து போகிறது. பிள்ளை பத்தாம் வகுப்பு படிக்கும்போதே.. பக்..பக்.. பிளஸ் –2 வில் நல்ல மார்க் எடுத்து பாஸ் செய்து காலேஜ்களில் இடம் கிடைக்குமா! என்று ஊர்ல இருக்கும் எல்லா ஊழியர்களுக்கும் லெட்டர் எழுதிப் போட்டு விடுவார்கள். வெளிநாட்டு ஊழியர் களையும் விட்டு வைக்கமாட்டார்கள். எல்லோரும் ஜெபம் பண்ணட்டும். யாராவது ஒருத்தர் ஜெபமாவது Workout ஆகுமே என்ற எண்ணம்தான். காணாததற்கு உங்கள் பத்திரிகையில் சாட்சி எழுதுவேன் என்ற பொருத்தனையோடு கூடிய பல்லவி. சரி இவ்வளவும் செய்து விட்டார்களே மனமகிழ்ச்சியோடு இருக்கலாமே! அதுதான் இல்லை எப்போதும் லப்...டப்.. லப்..டப். கிறிஸ்தவ நடைமுறை அனுபவத்தைச் சொல்லுகிறேன். வேதப்புத்தகத்தின் நடு வசனமாகிய சங்கீதம் 118 : 8,9 சொல்லு கிறது **மனுஷனை நம்புவதைப் பார்க்கிலும் கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம் பிரபுக்களை நம்புவதைப் பார்க்கிலும் கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்** ஆம்,கர்த்தர் மேல் பாரத்தை வைத்துவிட இன்னும் பழகாதவர்கள் வாழ்க்கையில் மனமகிழ்ச்சி என்பது ஒரு கானல் நீர்தான். சந்தேகமே இல்லை. கர்த்தருடைய தாசனா கிய சவுல் ராஜா நெருக்கத்தின் உச்சியிலே அஞ்சனம் பார்க்கிறவளைத் தேடி ஓடுகிறான். தேவனுடைய வார்த்தை வெகு அருகில் தொனித்தும், தேவன் மேல் தன் பாரத்தை, நம்பிக்கையை வைக்கத் தயங்குகிறான். லோத்து அப்படியல்ல ஆண்டவரே என்று சப்புகொட்டுகிறாள். ஓட

**ஓட வேண்டிய பாதையில் ஓடாமல் வழிவிலகி ஓடினால் இறுதியில் ஜீவன் தப்ப ஓடிப்போ என்று கூறினாலும் ஓடமுடியாது**

வேண்டிய பாதையில் ஓடாமல் வழிவிலகி ஓடினால் இறுதியில் ஜீவன் தப்ப ஓடிப்போ என்று கூறினாலும் ஓடமுடியாது என்றுதான் பதில் கூற முடியும். இன்று அநேகர் முடியாது ஆண்டவரே, அப்படியல்ல ஆண்டவரே என்று சொல்லிக் கொண்டு நடக்கக் காரணம் என்ன? கர்த்தர் மேல் தங்கள் முழுபாரத்தையும் வைக்க முடியாத அளவிற்கு நம்பிக்கையிலே குறைவுபட்டு போனதே! பேதுரு அழகாகச் சொல்லுகிறார் "**அவர் உங்களை விசாரிக்கிற வரானபடியால் உங்கள் கவலைகளை யெல்லாம் அவர் மேல் வைத்துவிடுங்கள்**" (1பேதுரு 5 : 7).

படகுக்கு பாரம் இல்லாதபடி புல்கட்டை தானே தன் தலையில் சுமந்து கொண்டு படகில் அமர்ந்திருந்தவன் கதை தெரியும்தானே! இன்றைய அநேக கிறிஸ்தவர்கள் அப்படித் தான்.என் மேல் வைத்துவிடு என்று சொன்னா லும் அவர் மேல் முழுமையாக வைக்கத் தயங்கி இரண்டு படகில் கால்களை வைத்துக் கொண்டு பயணம் செய்கின்றனர்.பயணம் எப்படியிருக்கும் என்று உங்களுக்கே தெரியும்.

ஆம், அருமையானவர்களே,கர்த்தர் மேல் பாரத்தை வைக்கப் பழகிக்கொள்வோம். அதுவே நம்முடைய மனமகிழ்ச்சிக்கு சரியான வழி.சிக்கலான நேரத்தில் சுற்றியலைவதல்ல, தேவனுடைய பாதத்தில் பாரத்தை வைத்து விடுவதே பரிகார மார்க்கம். மார்த்தாளோ அநேக காரியங்களைக் குறித்து கவலைப் பட்டுக் கலங்கினாள்.ஆனால் மரியாளோ அவர் பாதத்தில் அமர்ந்து தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்து கொண்டாள்.

## 3 . போதும் என்ற மனம்



"**உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள், நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை உன்னை கைவிடு வதுமில்லை என்று அவர் சொல்லியிருக் கிறாரே**" (எபி 13 : 5).

திருப்தியுள்ள மனம்.போதும் என்கிற மனம் எந்த நிலைமையிலும் மனமகிழ்ச்சி யோடு இருக்கும். திருப்தியற்றவன் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுக்கிறான். மற்றவர்களிடத்தில் எப்போதும் எரிச்ச லோடு நடந்து கொள்கிறான். மற்றவர்களை குறை கூறிக்கொண்டு தன்னுடைய வாழ்க்கையை நாசப்படுத்தி விடுகிறான். திருப்தியற்ற மனைவி தன் கணவனை சதா நச்சரித்து அவனை குறைகூறுகிறாள். கணவன், மனைவியை திருப்திப்படுத்த கடன் வாங்கி செலவு செய்கிறான்.முடிவில் அந்த கடனை எப்படி அடைப்பது என்று தெரியா மல் லஞ்சம் வாங்கவும்,குறுக்கு வழியில் சம்பாதிக்கவும் ஆரம்பித்துவிடுகிறான். கடைசியில் அவன் ஒருநாள் பிடிபட்டு வேலையை இழந்து, தங்களுக்கு தாங்களே சிறையிருப்பை உண்டு பண்ணிக்கொண்டு மிகுந்த வேதனையை அனுபவித்து வருகி றான்.

ஒருமுறை யோவான் ஸ்நானகனி டத்தில் போர்ச்சேவகர்கள் வந்து நாங்கள் என்ன செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். அதற்கு யோவான் சொன்ன பதில் என்ன தெரியுமா? **உங்கள் சம்பளமே போது மென்று இருங்கள்** என்றான் ( லூக் 3 :14). ஆம், திருப்தியுள்ளவன் மனமகிழ்ச்சியோடு

கர்த்தரை துதிக்கிறான். கர்த்தருடைய ஆசீர்வாதமும் அவன் மேல் தங்குகிறது. வேதம் சொல்லுகிறது “**கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு, அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள் செய்வார்** ”(சங் 37 : 4).போதும் என்ற மனம் எல்லோருக்கும் அவ்வளவு சீக்கிரத்தில் வந்து விடாது.அப்படி வந்து விட்டால் அவன் ஞானி என்று உலகத்தார் சொல்லுவார்கள். ஆனால் நான் சொல்லுவேன் அப்படி வந்து விட்டால் அவன்தான் தேவனுடைய பிள்ளை. அவன்தான் தேவனுக்குரியவன். **போதுமென்ற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்** (1தீமோ 6 :6).ஒரு சிலரை ஒன்றுமில்லாமையிலிருந்து கர்த்தர் ஆசீர்வதித்திருப்பார். வசதிகள், வீடு வாசல் வந்தவுடன் திருப்தியோடு கர்த்தருக்கு நன்றி சொல்லி நடந்துபோகாமல்,அந்த மனதோடு கூடிய தேவபக்தியை தொலைத்துவிட்டு இன்னும் பணம், இன்னும் ஆசீர்வாதம் இன்னும் வசதி வாய்ப்பு என்று தேடி தேடி தங்களையே உருவக் குத்திக் கொள்வார்கள். அண்ணண் என்னடா…தம்பி என்னடா… ஆண்டவன் என்னடா..எங்களுக்கு பணம்தான் முக்கியம் என்று ஆலாய் பறக்கிற கூட்டம் ஆவிக்குரிய வட்டாரத்தில் அதிகமதிகமாய் பெருகி வருகிறது.சவுலின் சந்ததிகளும், ஆகானின் அச்சுக்களும் கேயாசின் கூட்டுக் காரர்களும் யூதாஸின் இன பந்துக்களும், தேமாவின் சொந்தங்களும் கிறிஸ்தவ வட்டாரத்திதல் மலிந்து காணப்படுகிறார்கள். மலிவான காரியங்களுக்காக இழிவான காரியங்களை செய்கிற இறைமக்கள் அதிகரித்து வருகிறார்கள்.பணம் படுத்தும் பாடு. பரிசுத்தத்திற்காக ஒரு நாளிலே பறந்தவர்களையும் பந்தாட வைக்கிறது. பழையவைகளையெல்லாம் மறக்கச் செய்கிறது, பழகினவர்களையெல்லாம் விலக்குகிறது.எரிந்து கொண்டிருந்த விளக்குளை அணைக்கிறது.கல்வாரி அன்பை கூறுபோட வைக்கிறது.தேவ இராஜ்யத்தை மறக்கச் செய்து, இவ்வுலக இராஜ்யத்திலே இருதயத்தை அமிழ்த்திவிடுகிறது.இது பரிதாபம் தானே…!

**சிலர் நினைக்கிறார்கள் பிசாசை துரத்தவும், வியாதியை சுகமாக்கவும் மட்டுமே தேவன் அதிகாரம் கொடுத்திருக்கிறார் என்று. இல்லை, பணத்தை நிற்க வேண்டிய இடத்தில் நிற்க வைக்கவும் தேவபிள்ளைக்கு ஒரு தேவஊழியருக்கு இயேசு அதிகாரம் கொடுத்திருக்கிறார்.**

மன மகிழ்ச்சி எப்படியிருக்கும்? ஆரம்ப நாட்களில் ஒன்றுமில்லாதிருந்த போது கிறிஸ்துவோடு கூட நடந்த அந்த மகிழ்ச்சி எங்கே? அந்த ரம்மியம் எங்கே? இப்பொழுது எல்லாம் இருந்தும் அந்த மகிழ்ச்சியும், மலர்ச்சியும் மறைந்து இருதயத்திலே எப்போதும் கிளர்ச்சிதானே இருக்கிறது இது கடைசி நாட்கள்.நம்முடைய அழைப்பைக் காத்துக் கொள்வோம். அழைப்பு வீண் அலப்பாய் மாறிவிடாதபடி நம்மை கிறிஸ்துவுக்குள் தக்க வைத்துக் கொள்வோம்.

கர்த்தரை ருசிப்பதுதான் நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையின் ஒரு அஸ்திபாரம் கற்பாறையிலே ஆழமாக கட்டும்போது மட்டும்தான் இந்த போதும் என்ற மனம் வரும்.அதிலே நிலைத்திருக்கவும் முடியும். இல்லாவிட்டால் நாளடைவில் போதும் என்பது மறைந்து, சூதும் வாதும்தான் முன்னால் நிற்கும். நான் அதிகம் பார்த்து அனுபவித்ததால் தடையின்றி எழுதுகிறேன். சிலர் நினைக்கிறார்கள் பிசாசை துரத்தவும், வியாதியை சுகமாக்கவும் மட்டுமே தேவன் அதிகாரம் கொடுத்திருக்கிறார் என்று. இல்லை, பணத்தை நிற்க வேண்டிய இடத்தில் நிற்க வைக்கவும் தேவபிள்ளைக்கு ஒரு தேவ ஊழியருக்கு இயேசு அதிகாரம் கொடுத்திருக்கிறார். நாம்தான் பணத்தை நடத்த

வேண்டுமேயொழிய, பணம் நம்மை நடத்தக் கூடாது.பணம் நம்மை நடத்தினால் மன மகிழ்ச்சி தொலைந்து போய்விடும். அதற்கப் புறம் நடப்பதெல்லாம் வன நிகழ்ச்சியாய்தான் இருக்குமேயொழிய மனமகிழ்ச்சியாய் இருக் காது. தேவஜனமே விழிப்பாயிருப்போம். "**கர்த்தருடைய ஆசீர்வாதமே ஐசுவரியத் தைத் தரும் அதனோடே அவர் வேதனை யைக் கூட்டார்** " *(நீதி 10 : 22).*

இராஜாக்களின் புத்தகத்தில் அநேக ராஜாக்களின் தடுமாற்றத்திற்கும், விழுகைக்கு காரணம் கர்த்தர் காட்டின இடத்தில் நிற்கா மலும், போதும் என்ற மனம் இல்லாமையே பிரதான காரணமாகக் காணப்படுகிறது. சாலொமோன் விழுந்தான்.அவனுக்கு 300 மனைவிகளும் 700 மறுமனையாட்டிகளு மாம்.நீங்களே யோசித்துப் பாருங்கள் அந்த ஞானி ஏன் விழுந்தான் என்று.எசேக்கியாவின் அட்டகாசமான ஆரம்பம் கடைசியில் அற்ப மாகிவிட்டது. யூதாவின் ராஜா யோசபாத்தைப் பாருங்கள். தகப்பன் குழந்தையை சுமப்பது போல் யோசபாத்தை சுமந்து நடந்தார். அவனுக்காக வழக்காடினார். யுத்தம் செய்தார். தாங்கினார். தப்புவித்தார்ஆனால் அவனோ எல்லோரி டமும் நல்ல பிள்ளை என்று பேர் வாங்கி ராஜ்யபாரத்தை தக்கவைத்துக் கொள்ள முயற்சித்து பாகால் மேடைகளை தகர்க்காமல், பொல்லாப்பு நிறைந்த இஸ்ரவேல் ராஜாவாகிய அகசியாவுடன் தோழமை கொண்டு தன் வாழ்வை கெடுத்துக் கொண்டான். யோசபாத்துக்கு ஒரு மண்ணாசை என்றால் எசேக்கியாவுக்கு பொன் னாசை. சாலொமோனுக்கோ பெண்ணாசை.

மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை ஆக, எல்லா ஆசையும் சேர்ந்து ராஜாக்களை கவிழ்த்து போட்டது.இன்றும் ஆசைதான் அநேகரை கவிழ்த்துப்போடு கிறது.மனமகிழ்ச்சியை மங்கியெரிகிறதாக்கி விடுகிறது.அநேக நேரங்களில் அணைத்தும் போடுகிறது.போதும் என்ற மனதோடு நடக்க முயற்சிப்போம். அதுவே மனமகிழ்ச்சி. அதுவே சரியான ஆவிக்குரிய வளர்ச்சி.

"**ஐஸ்வரியவனாக வேண்டுமென்று பிரயாசப்படாதே சுயபுத்தியைச் சாராதே**" *(நீதி 23 : 3).*"**மனமகிழ்ச்சியே முக்கியம். மனசமாதானமே பிரதானம். மனமகிழ்ச்சியே நல்ல ஔஷதம்**" *(நீதி 17 : 22).*

**மாற்றும் என்னை உந்தன் சாயலாய்**
**ஊற்றும் உந்தன் ஆவியை என்னில்**
**சாற்றுவேன் உந்தன் நாமத்தை என்றும்**
**நேற்றும் இன்றும் மாறா இயேசுவையே**

**கல்வாரி சிலுவையில் தேவஅன்பு**
**கல்லான என்னுள்ளத்தை மாற்றினீரே**
**தூரமாய் இருந்த என்னைத் தம் கரத்தால்**
**தூக்கி அணைத்த தேவஅன்பு**

தேவ அன்பில் இணைக்கப்படுவோம். தேவஅன்பு ஒன்றுதான் மேலே சொல்லப்பட்ட மூன்று அனுபவங்களையும் நமக்கு தரக் கூடியதாயிருக்கிறது. அன்பின் கயிற்றினால் இழுக்கப்படுவோம். வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழுவோம். மனரம்மியமே ஆரோக்கியம் நிறைந்த சரீரம்.அதுவே நமது சாரீரமாய் இருக்கட்டும். நோயற்ற வாழ்வு. அதுவே குறைவற்ற செல்வம்.

**தாழ்மைக்கும், கர்த்தருக்கு பயப்படு தலுக்கும் வரும் பலன் ஐசுவரியமும் மகிமை யும் ஜீவனுமாம்** (நீதி 22 : 4)



# சிந்தனைக்கு

- நமது பெலவீனத்தை நாம் ஒப்புக்கொள்ம்போது தேவனுடைய பெலன் நம்மில் வெளிப்படுவதற்கு ஏதுவாயிருக்கிறது.
- இரட்சிப்பு என்பது பழக்க வழக்கங்களின் சீரமைப்பு அல்ல அது குணாதிசயங்களின் மாற்றமாகும்.
- முடிவில் தோல்வியைத் தவிர்க்க துவக்கத்திலேயே தேவனை சார்ந்திருங்கள்-
- நாம் ஒளியின் மேன்மையை கண்டுணரும்படி தேவன் சிலவேளைகளில் நம்மை இருளில் விட்டுவிடுகிறார்.
- ரோஜாக்களுக்கு நடுவே முள் இருக்கிறதேயென்று முறுமுறுக்காதே முட்களுக்கு நடுவே ரோஜா இருக்கிறதேயென்று சந்தோஷப்படு.
- பணத்தை மட்டுமே செல்வமாக கொண்டிருக்கிறவன் மற்றெல்லாரையும் விட ஏழையாக இருக்கிறான்.
- பெருமை உன்னில் சிறுமையாகும்போது ஆண்டவர் அணைத்திடுவார் பெருமைக்கு நீ உரிமையாகும்போது ஆண்டவர் எ(திர்)த்திடுவார்.

## திரு குரல்

1.தூற்றுவார் உரத்த குரலால் பிறர்
தீமையை – அவர்தாமே
போற்றுவார் உலர்ந்த குரலால் பிறரின்
நன்மைகளை.

2.பண ஆசை வரும் முன்னே –
மனிதனுக்கு
மன வியாதி வரும் பின்னே .

3.ஆக்கமும் அவதியும் நாவால் வருவதால்

காத்து ஓம்பல் விசுவாசிக்கு அழகு .

4.மலர்ந்திருந்தும் மணம் தரா சபை
– அது
சுவிசேஷ ஊழியம் செய்யாமல் முடங்கிக்
கிடக்கும் சபையே .

## வானவெடி

**என் மகிமையை வேறொருவனுக்கும் என் துதியை விக்கிரகங்களுக்கும் கொடேன்** (ஏசாயா 42 : 8 ) என்று வசனம் தெளிவு படுத்துகிறது. விக்கிரகங்கள் என்பது வெறும் சிலையும், சுரூபமும் மட்டுமல்ல, அவருடைய மகிமை பின்னால் தள்ளப்பட்டு, வேறெதையும் முன் வைத்தாலும் அது விக்கிரக ஆராதனையே! ஆவிக்குரிய வட்டாரத்தில் மனித புகழ்ச்சியும், ஊழியர்களை தலைமேல் தூக்கி வைத்து கொண்டாடுவதும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

ஊழியர்களை நிச்சயமாய் கனம் பண்ணித்தான் ஆக வேண்டும்.அதே நேரம் தேவன் இருக்க வேண்டிய இடத்தில் எந்த ஊழியரையும் நிற்க வைத்து அழகு பார்க்க வேண்டாம். அதனால் கிடைக்கிற உங்கள் அழகையும் பிறருக்கு வெளிச்சம் போட்டு காட்ட வேண்டாம்.

▲




## சகோதரிகள் பகுதி

**கி**றிஸ்துவுக்குள் பிரியமான சகோதரிகள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எங்கள் வாழ்த்துதலை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**இந்த மாத இதழிலும் வேதத்திலுள்ள கனம் பொருந்திய ஸ்திரீயைக் குறித்து தியானிக்க ஆவியானவர் உதவிச்செய்வாராக.**

2 இராஜா 4 : 13 - " **அவன் (எலிசா) கேயாசியைப் பார்த்து ,இதோ இப்படிப்பட்ட சகல சலக்கரணையோடும் எங்களை விசாரித்து வருகிறாயே, உனக்கு நான் என்ன செய்ய வேண்டும்? ராஜாவினிடத்திலாவது சேனாபதியினிடத்திலாவது உனக்காக நான் பேச வேண்டிய காரியம் உண்டோ என்று அவளைக் கேள் என்றான். அதற்கு அவள் ; என் ஜனத்தின் நடுவே நான் சுகமாய் குடியிருக்கிறேன் என்றாள்** " .

## தேவனுடைய வார்த்தையின் மேல் ஒரு தாகம்

**அருமையானவர்களே, இந்த ஸ்திரீயினுடைய பதில் எவ்வளவு ஆச்சரியமாயிருக்கிறது! இவள் தேவனுடைய வார்த்தையை அறிந்து , அதற்கு தன்னை முழுமையாக ஒப்புக்கொடுத்திருந்தபடியால்,தேவன் மேல் நம்பிக்கை வைத்து, ஒரு உறுதியுடன், தைரியமாய் இந்த வார்த்தையை சொல்லுகிறாள்.இத்தனைக்கும் வசனம் 14ல் வாசிக்கிறோம்...அவளுக்கு பிள்ளை இல்லை அவள் புருஷனும் பெரிய வயதுள்ளவன் என்று. ஆனாலும் பாருங்கள், தேவன் தன் வாழ்க்கையில் எதை கொடுத்திருக்கிறாரோ ....அந்த கொடுத்ததில் ஒரு திருப்தி...தேவன் தன்னை வைத்திருக்கிற நிலையில் ஒரு மனநிறைவு.தேவனை அறிகிற அறிவுக்கு முன்பாக ...தன்னுடைய எந்த குறைவுகளும் அவளுக்கு குறைவாகவே தெரியவில்லை....என்னை சுற்றியிருக்கிற ஜனங்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும்.. ஜாதிகள் கொந்தளித்து.. விருதா காரியங்களை சிந்திக்கிறவர்களாக இருந்தாலும், அநேக ஏற்ற இறக்கங்களோடே இருந்தாலும் ....அவர்கள் மத்தியிலும் என் தேவன் என்னை சுகமாய் குடியிருக்கப் பண்ணுகிறார் என்று சொல்லுகிறாள்.**

சங் **4 : 7,8** ல் தாவீது சொல்கிறது போல, " **தானியமும், திராட்சரசமும் பெருகியிருக்கிற காலத்தின் சந்தோஷத்தைப் பார்க்கிலும், அதிக சந்தோஷத்தை என் இருயத்திலே தந்தீர்.சமாதானத்தோடே படுத்துக்கொண்டு நித்திரை செய்வேன் ; கர்த்தாவே , நீர் ஒருவரே என்னை சுகமாய் தங்கப் பண்ணுகிறீர்** ". **என்ற வசனத்தின்படியே இந்த ஸ்திரீயும் தேவனுடைய வார்த்தையினால் உண்டான ஆறுதலையும் சமாதானத்தையும் பெற்றுக்கொண்டபடியால் இப்படி சொல்ல முடிந்தது.**

**அருமையானவர்களே,இந்த கோணலும் மாறுபாடுமான சந்ததியிலிருந்து கர்த்தர் நம்மை வேறு பிரித்து தமக்கேற்ற பரிசுத்த ஜனமாக தெரிந்துகொண்டிருக்கிறார்.குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டிருக்கிறோம் (1பேதுரு 1 : 19). விலையேறப்பெற்ற இரட்சிப்பைப் பெற்றிருக்கிற நாம் நம்மை சுற்றியிருக்கிற ஜனங்களின் மத்தியில், நம்முடைய செய்கைகள் அல்லது நம்முடைய சாட்சி அல்லது நம்முடைய அறிக்கைகள் எப்படிப்பட்டதாயிருக்கிறது ? சிந்தித்துப் பார்ப்போம் .**

**அப்பொழுது அவன் : அவளைக் கூப்பிடு என்றான் ; அவளைக் கூப்பிட்டபோது,அவள் வந்து வாசற்படியிலே நின்றாள்.** அருமையானவர்களே, இங்கே இந்த ஸ்திரீ தேவனுக்கும் ,தேவமனுஷனுக்கும் முன்பாக தாழ்மையாக நடந்து கொள்வதைப் பார்க்கிறோம்.தன்னையும், தனக்குரிய எல்லாவற்றையும் தேவனிடத்தில் அர்ப்பணித்திருந்தபடியினாலே..தன்வீட்டின் மேல் முழு சுதந்தரத்தையும்,உரிமையையும் கொடுக்க முடிந்தது. தேவமனுஷன் உள்ளே...இவள் வெளியே...அருமையானவர்களே,நாமும் பரிசுத்தஆவியானவர் நமக்குள் வாசஞ்செய்து நம்மை முழுமையாக ஆளுகை செய்யும்படி ஆவியான வருடைய சத்தத்திற்கு இடம் கொடுப்போம். தேவனுடைய வார்த்தைக்கு முற்றிலுமாக நம்மை ஒப்புக்கொடுப்போம்.இவளுடைய தாழ்மை இவளுக்கு மேன்மையை கொண்டு வந்தது.இவள் நினைக்காத ...கேட்காத... ஆசீர்வாதத்தையும் பெற்றுக்கொண்டாள்.

**அப்பொழுது அவன் : ஒரு பிராண உற்பத்தி காலத்திட்டத்திலே ஒரு குமாரனை அணைத்துக் கொண்டிருப்பாய் என்றான்.ஏது? தேவனுடைய மனு ஷனாகிய என் ஆண்டவனே,உமது அடியாளுக்கு அபத்தம் சொல்ல வேண்டாம் என்றாள்.அந்த ஸ்திரீ கர்ப்பம் தரித்து எலிசா தன்னோடே சொன்னபடி ,ஒரு உற்பத்திக்காலத் திட்டத்தில் ஒரு குமாரனைப் பெற்றாள்.** அருமையானவர்களே,தேவனுடைய கிருபையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்.அவராலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிற நம்மிடத்தில் தேவன் நீதிமானுக்குரிய கிரியைகளை எதிர்பார்க்கிறார்.அருமையான இந்த ஸ்திரீ தேவனுடைய வார்த்தையின்படி வாழ தன்னை அர்ப்பணிந்திருந்தாள்.தேவனிடத்தில் அன்புள்ளவாளாக...தேவனுடைய வீட்டின் மேல் தாகமுள்ளவளாக...தேவனுடைய வார்த்தையை நேசித்து கீழ்படிகிறவளாக இருந்தாள். அதனால் அவள் வேண்டிக்கொள்ளாமலேயே அவள் எதிர்பாராத, மிகவும் ஆச்சரியமான விதத்தில் கர்ப்பத்தின் கனியை கட்டளையிட்டார்.


தேவமனுஷன் ஜெபித்து, தேவனால் கொடுக்கப்பட்ட பிள்ளைதான்.ஆனாலும் வசனம் 20 சொல்லுகிறது **அவனை எடுத்து,அவன் தாயினிடத்தில் கொண்டு போனபோது,அவன் மத்தியானமட்டும் அவள் மடியில் இருந்து செத்துப்போனான்** என்று வாசிக்கிறோம். ஆனாலும் அவள் கலங்கிப் போகவில்லை, தேவனை தூஷிக்கவில்லை, அழுதுகொண்டு ஊரைக் கூட்டவில்லை ...தன் புருஷனிடத்திலும் சொல்ல வில்லை... **வார்த்தையினாலே தேவனை அறிந்திருந்த அவள்....**வார்த்தையினாலே உண்டான **விசுவாசத்தோடு** மிகவும் தைரியமாக செயல்பட்டாள்

வசனம் 11 சொல்லுகிறது **அப்பொழுது அவள் ஏறிப்போய், அவனை தேவனுடைய மனு ஷன் கட்டிலின் மேல் வைத்து,அவன் வைக்கப்பட்ட அறையின் கதவைப் பூட்டிக்கொண்டு போய்,...வசனம் 27 சொல்லுகிறது, பர்வதத்திலிருக்கிற தேவனுடைய மனுஷனிடத்தில் வந்து, அவன் காலைப் பிடித்துக் கொண்டாள்;** வசனம் 30 சொல்லுகிறது **பிள்ளையின் தாயோ: நான் உம்மை விடுகிறதில்லை என்று கர்த்தரின் ஜீவனையும் உம்முடைய ஜீவனையும் கொண்டு சொல்லுகிறேன் என்றாள் ;**

ஆம், அருமையானவர்களே,சில நேரங்களில் நம்முடைய விசுவாசம் சோதிக்கப்படும்படி கர்த்தர் நம்மை தனிமையில் விட்டுவிடுவார்.சூழ்நிலைகளின் நிமித்தமாகவோ அல்லது சில மனிதர்களின் நிந்தைகளின் நிமித்தமாகவோ..சிலவேளைகளில் நம்முடைய உறவுகளில் உண்டாகிற உடைவுகளோ , இழப்புகளோ எதுவாக இருந்தாலும் துக்கத்தினால் நம் இருதயம் நொறுங்கிப்போகும்போது....எந்த மனுஷனும் ஆறுதல் படுத்த முடியாத,சரிசெய்ய முடியாத ஒரு இடத்திற்கு நாம் வந்துவிடுகிறோம்.இந்த நிலையில் நாம் தேவனுடைய பாதத்தில் அமர்ந்து நம் இருதயத்தை ஊற்றிவிடும்போது நம் தேவன்,எல்லா புத்திக்கும் மேலான தேவசமாதானத்தினாலும் , சகலவித ஆறுதலினாலும் நம்மை நிரப்புகிறவராயிருக்கிறார்.நம் ஆத்துமாவையும் உயிர்ப்பிக்கிற கர்த்தராயிருக்கிறார்.அருமையானவர்களே, **மரித்தேன் ஆயினும் சதாகாலங்களிலும் உயிரோடே கூட இருக்கிறேன்** என்று சொல்லியிருக்கிறபடியால் நாம் ஆத்துமாவில் எந்த நிலையிலும் நாம் சோர்ந்துபோகாமல்..நம்மை முற்றிலுமாய் தேவனுடைய கரத்தில் ஒப்புவிப்போம். கர்த்தர்தாமே உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக.

சகோதரி : **லீமா போஸ்கோ**

# சுத்தம் சோறு போடும்



சுத்தம் என்பது
சுற்றுபுறத்துக்கு மட்டுமல்ல..
தனிமனிதனுக்கும் வேண்டும்

பற்களை துலக்கும் போது
சொற்களையும் துலக்கு
வார்த்தையின் சுத்தமே
வாழ்க்கையின் சுத்தம்

முகத்தைக் கழுவும்போது
அகத்தையும் கழுவு
நகத்தை நறுக்கும்போது
அகத்தையும் செதுக்கு

மீசையை வழிப்பதும்
ஆசையை மழிப்பதும்
வாழ்க்கையை வடிவாக்கும்

அகத்தில் சுத்தமில்லாதவனை
முகபாவம் காட்டிக் கொடுக்கும்
நாவில் சுத்தமில்லாதவனை
நாயும் நிராகரித்துவிடும்

கள்ளத்தராசு
கர்த்தருக்கு அருவருப்பானது
நாணயத்தைக் காப்பாற்று
நாணயம் தானாக வந்துசேரும்

ஆள்பாதி ஆடைபாதி என்பார்கள்
ஆடையில்
சுத்தமில்லாதவனாக கண்டால்
பாடையும் முகம் சுளிக்கும்
தன் வஸ்திரத்தை
காத்துக் கொள்கிறவன்
பாக்கியவான்

சந்தையில் சேரும் கழிவுகளை
சந்தை பணியாளர்
சுத்தம் செய்வர் - உன்
சிந்தையில் உருவாகும்
கழிவுகளை யார் சுத்தம் செய்வது!

உள்ளத்தின் கேடுபாடுகளை
உன்னைவிட்டு அகற்று
ஜெயம் கொள்பவனுக்கு
வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும்

சோப்பு போட்டால்
உடம்பு சுத்தமாகும்
ஈசோப்பு போட்டால்
உள்ளம் சுத்தமாகும்

உன் நினைவுகள்
உயர்வாய் இருக்கட்டும்
உனது கனவுகள் மெய்ப்படும்

கைகளை சுத்தமாக வை
பையை நிரப்ப வேண்டுமென்று
கையை கறைபடுத்தாதே
கை சுத்தமில்லை என்றால்
கையாலாகாதவன் என்பர்

வாலிபன் தன் வழியை
எதனால் சுத்தம் பண்ணுவான்
கர்த்தருடைய வசனத்தால்
காத்துக் கொள்வதால்தானே.

பாதங்களை
சுத்தம் செய்யும் போது
பாதைகளையும் சுத்தம் செய்.

பாதைகள் சுத்தமாக இருந்தால்
பயணங்கள் சுகமாக இருக்கும்.

தேவாலயம் போகையில் - உன்
நடையை காத்துக் கொள்
நடக்கையை சுத்தமாக வை
நடப்பதெல்லாம்
நன்றாக நடக்கும்
நடக்கை சுத்தமில்லாதவனுக்கு
படுக்கையும் இடம் தர மறுக்கும்

கண்கள் சரீரத்தின் விளக்கு
கண்கள் சுத்தமில்லையென்றால்
சரீரம் முழுவதும் இருண்டு
போகும்

பார்வை சுத்தமாக இருந்தால்
வாழ்க்கை ஒளியாகும்
அதனால்....
கண்ணுக்கு கலிக்கம் போடு
காதுக்கு கடிவாளம் போடு
வாழ்க்கை சுத்தமாகும்

சுத்தம் சோறு போடும்!!
பரலோகம் மன்னா போடும்!!





✸ ✸ ✸

அல்பா என். ஆசைத்தம்பி (ஆவடி 9841166883 ).


# கண்டதும் கேட்டதும்

மந்திரவாதமும் குறிசொல்லுதலும் தேவனுக்குரியது அல்ல. அது பிசாசுக்குரியது. வேதத்தில் வெறுக்கப்படுகிற காரியங்களாக அடையாளம் காட்டப்படுகிறது. இவற்றுக்கே உரிய சில வல்லமைகள் உண்டு. ஆனாலும் தேவனுடைய வல்லமைக்கு முன் இவைகள் அற்பமும் பலனற்றவைகளே. ( எண் 23 : 23 )

இன்றைய நாட்களில் விசுவாசிகள் என்று அழைக்கப்படுபவர்கள் இதற்கு அதிகமாய் பயப்படுவது வேதனையான காரியமே ! சாத்தானின் தந்திரமான ஆயுதம் பயத்தை கொண்டு வருவது. அநேக வேளைகளிலே அதில் அவன் வெற்றியும் அடைந்து விடுகிறான். வசன அறிவுடையவர்கள் எவரும் இத்தகைய சாத்தானின் பூச்சாண்டிகளுக்கு பயப்படமாட்டார்கள். இதில் என்ன விசேஷமென்றால் இப்படிப்பட்ட விசுவாசிகளின் பயத்தை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு , ஜெபம் என்ற போர்வையிலே, தகடு எடுக்கிறேன், சூனியத்தை உடைக்கிறேன், செய்வினையை முறிக்கிறேன் என்று சில ஊழியர்களே கிளம்பி செல்லுவதும், பயந்து போயிருக்கிற விசுவாசிகளை தங்கள் கைக்குள் அடிமைப்படுத்திக் கொள்வதும் பணம் பரிமாற்றம் செய்துகொள்வதும் இன்றைய நாட்களில் அடிக்கடியாக காண்கிற ஒரு மெகா சீரியலாக இருக்கிறது. இவைகளெல்லாம் வெறும் ஏமாற்று வேலையேயன்றி வேறல்ல.




விசுவாசியே, உஷார்...உஷார்.. தகடு எடுக்கிறவர்களுக்கும், உச்சிவகடு பிடிக்கிறவர்களுக்கும் விலகியே இரு. நடுவீட்டில் வந்து அமர்ந்து கொண்டு சாத்தானோடு பாடு பேசுகிறவர்கள், உன்னுடைய பாடுகளுக்கு பரிகாரிகள் அல்ல, விழிப்பாயிரு. பிசாசானவன் பொய்யனும் பொய்க்கு பிதாவுமாக இருக்கிறான் ( யோ.8 : 44 ) நீ யார் ? எங்கிருந்து வந்தாய்? எப்படி வந்தாய்? எந்த வழியாக வந்தாய்? ஏன் வந்தாய்? உனக்கு என்ன தேவை? பேசாமல் போய்விடு, இல்லாவிடில் உன்னை பாதாளத்தில் தள்ளி கட்டிப்போட்டு விடுவேன் என்று திரைக்கதை வசனம் பேசிக் கொண்டிருப்பார்கள். அவனுக்கு தெரிந்ததெல்லாம் பொய். பொய்யாய் சொல்லி நல்லா இருக்கிற பக்கத்து வீட்டுக்காரனோடும், வீட்டுக்கு அன்பாக வந்துபோய் கொண்டிருக்கிற உறவினர்களோடும் சண்டை போட வைப்பான். உனக்கு இருக்கும் கொஞ்ச நஞ்சம் சமாதானத்தையும் களவாடுவான். மிகவும் எச்சரிக்கையாயிருங்கள். “கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப் பாருங்கள் கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல் அவைகளை கடிந்துகொள்ளுங்கள் ”. (எபே 5:10,11) .




## கவனியுங்கள்

கடந்த மாதம் 25 பேர் எழுதியதில் 23 பேர் சரியான பதிலை கொடுத்திருக்கிறார்கள். நல்லது. தொடர்ந்து மற்றவர்களுக்கும் இந்தப் பகுதியை அறிமுகம் செய்து, வேதத்தை வாசிக்க ஊக்குவியுங்கள்.

### வேத பகுதி

**எண்ணாகமம் : 36 .**
**உபாகமம் 1 முதல் 4 வரை**

1.மலை நாட்டைச் சுற்றித் திரிந்தது போதும் ------------ திரும்புங்கள். நிரப்புக .

2.பாசானின் ராஜா யார்?

3.உபாகமம் 4 -ல் அக்கினி என்ற வார்த்தை எத்தனை முறை வருகிறது?

4.யோசேப்புக்கு கீலேயாத் யார்? என்ன உறவு?

5.ஏமியரின் ஸ்தலம் யாருக்கு சுதந்தரமாக கொடுக்கப்பட்டது?

6.எஸ்போனின் ராஜா யார்?

7.கைவிடமாட்டார்-அழிக்கமாட்டார்-உடன்படிக்கையை மறக்கவும் மாட்டார் - அதிகாரம் வசனம் குறிப்பிடுக.

8.காதேஸ் பர்னேயாவின் இருப்பிடம் எங்கே?

9.எப்புன்னே - காலேப் . உறவு என்ன?

10.ஏசாவின் புத்திரர்களின் இருப்பிடம் எது?

### கடந்த மாதம் சரியான பதில் எழுதியவர்கள்

1. மஹா (வேப்பம்பட்டு).
2. அசோக் நீதிமொழி (திருவள்ளூர் ) .
3.செல்வம் ஜெயராஜ் (பிலாய் ).
4.சரஸ்வதி தேவராஜ் (எக்மோர் ).
5.ஜெனிபர் (திருமுல்லைவாயில்).
6.ரெஜினா பாண்டியன் (அம்பத்தூர்).
7.ரம்யா லிவிங்ஸ்டன் (போரூர்).
8.இவான்ஜலின் (காட்பாடி).
9.லீலா ஜெயபால் (காமராஜ் நகர்).
10.எட்வினா (கோயில் பதாகை).
11.கீதா தினேஷ் (பொத்தூர் ).
12.Dr.இவான்ஜலின் ஜோன்ஸ் (சேலம்).
13.ரோஸ் மேரி (எருக்கன் சேரி).
14.லாவன்யா சதீஷ் (வெள்ளானூர்).
15.டாரீஸ் பிலோமினா (செங்குன்றம்).
16.செல்வராஜ் சாலொமோன் (வள்ளியூர்).
17.காருண்யம் (ராணிப்பேட்டை).
18.எலிசபெத் சாலொமோன் (கன்னிகாபுரம்).
19. சுகந்தி ஜோன்ஸ் (திருச்சி ).
20.ஜாய் வெரோனிக்கா (திருநெல்வேலி ).
21.ஜாய் ஜோஷ்வா (சேலம் ).
22.மதுமிதா ( வெள்ளானூர்).
23.சீயோன் ராஜகுமாரி (வெள்ளானூர்).

பரிசு பெற்றவர் : **ஜாய் ஜோஸ்வா ( சேலம் )**

**விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 28 - 9 - 2023.**